# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# 2019

## தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சு

செலவினத் தலைப்பு இலக்கம் 157

# உள்ளடக்கம்


முதலாம் அத்தியாயம் ........ 5

நிறுவனத்தின் விபரம் / நிறுவனத்தின் பொழிப்பு ........ 5

1.1.அறிமுகம் ........ 7

1.2. தொலைநோக்குஇ பணிநோக்குஇ குறிக்கோள் ........ 7

1.3 பிரதான பணிகள் ........ 8

1.4.அமைச்சின் அமைப்பு வரைப்படம்-2019 ........ 9

1.5. அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் ........ 10

1.6. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் ........ 10

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் ........ 11

இரண்டாம்அத்தியாயம் ........ 13

முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் ........ 13

2.1. அமைச்சின் செயலாற்றுகை 2019 ........ 15

2.1.1.தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவு ........ 17

2.1.2.மொழி உரிமைகள் பிரிவு ........ 22

2.1.2 நிர்வாகப் பிரிவு ........ 24

2.1.3 திட்டமிடல் பிரிவு ........ 24

2.1.4 கணக்குப் பிரிவு ........ 24

2.1.5. உள்ளக கணக்காய்வுப் பிரிவு ........ 25

2.1.6. நல்லிணக்கத்தை நோக்கமாகக் கொண்ட பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூ உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டு கருத்திட்டம் ........ 26

2.1.7. அபிவிருத்தி உதவி கருத்திட்டங்கள் ........ 29

2.1.8. மாவட்ட நல்லிணக்க குழுக்கள் ........ 31

2.1.9. காணாமல் போனோர் தொடர்பாக சான்றுப்படுத்தப்பட்ட பெருநர்களுக்கு ரூ 6000.00 இடைக்கால நிவாரண நன்கொடையை வழங்குதல் ........ 31

2.1.அமைச்சின் நிறுவனங்களின் செயலாற்றுகை 2019 ........ 35

2.2.1 அரசகரும மொழிகள் திணைக்களம் ........ 37

2.2.2 அரசகரும மொழிகள் ஆணைக்குழு ........ 38

2.2.3 தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் ........ 39

2.2.4 அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகம் ........ 42

2.2.5 தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் ........ 48

அறிமுகம் ........ 48

2.2.6 இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் ........ 50

அறிமுகம் ........ 50

2.2.7 காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ........ 51

மூன்றாம் அத்தியாயம் ........ 53

2019 டிசம்பர் 31ம் திகதிய இறுதி ஆண்டிற்கான முழு நிதி செயலாற்றுகை ....53
3.1 நிதி செயலாற்றுகை பற்றிய கூற்று....55
3.3 நிதி நிலைமை பற்றிய கூற்று....56
3.4 காசு பாய்ச்சல் பற்றிய கூற்று....57
3.5நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்....58
3.6 வருமான சேகரிப்பு செயலாற்றுகை ....59
3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ....59
3.8 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் /திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம் /மாகாண சபைக்கான வெலவினத்திற்கானஒதுக்கீடு....59
3.9 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ....60
3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ....61
நான்காம் அத்தியாயம் ....77
செயலாற்றுகை சுட்டிகள் ....77
4.1 நிறுவனத்தின் வெயலாற்றுகைச் சுட்டிகள்(செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) ....79
ஐந்தாம் அத்தியாயம் ....87
பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை....87
ஆறாம் அத்தியாயம் ....93
மனித வள விபரம் ....93
6.1 பதவியணி முகாமைத்துவம்....95
6.2 ** பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக....95
6.3.மனித வள அபிவிருத்தி ....96
ஏழாம் அத்தியாயம்....101
இணக்கப்பாட்டு அறிக்கை....101

# முதலாம் அத்தியாயம்

# நிறுவனத்தின் விபரம் / நிறுவனத்தின் பொழிப்பு

**1.1.அறிமுகம்**

இலக்கம் 1945/40 மற்றும் 2015.12.18 ஆம் திகதிய விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சானது ஸ்தாபிக்கப்பட்டதுடன் அவ்வமைச்சு 2070/56 மற்றும் 2018/05/12 ஆம் திகதிய வி'ேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தேசிய சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மீண்டும் இலக்கம் 2103/33 மற்றும் 2018.12.28 ஆம் திகதிய விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பரந்த களம் மற்றும் 07 கொண்ட தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சாக ஸ்தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சராக கௌரவ மனோ கணேசன் அவர்களும் செயலாளராக திருமதி. ஏ.எஸ்.எம்.எஸ்.மஹானாம அவர்களும் கடமையாற்றுகின்றனர்.

2019.12.10 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சில் தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்கப் பிரிவாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 40, புத்கமுவ வீதி, இராஜகிரிய எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ளதுடன் அதன் அரச அமைச்சராக மொஹான் த சில்வா அவர்களும் அரச அமைச்சின் செயலாளராக கீதாணி சி கருணாரத்ன அவர்களும் கடமையாற்றுகின்றனர்.

1.2. தொலைநோக்கு, பணிநோக்கு, குறிக்கோள்

**தொலைநோக்கு**

பல்வகையினால் பலம் பெற்றதும் சகவாழ்வு மீள் நிர்மாணிக்கப்பட்டதும் அனைத்து கலாச்சாரங்களினதும் தனித்துவங்களும் பேணி போற்றப்படுகின்றதுமான இலங்கை தேசம்.

**பணிநோக்கு**

அனைத்து மக்கள் குழுக்களினதும் உரிமைகள் உறுதிசெய்யப்படுகின்ற, ஒருவரை ஒருவர் பரஸ்பரம் மதிக்கின்றதும், சகவாழ்வுடனும் அபிவிருத்தியடைந்ததுமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான கொள்கைகளை உருவாக்குதல், கலந்துரையாடல்களை ஏற்படுத்தல், வழிகாட்டுதல், வசதியளித்தல் மற்றும் அதற்கு உரித்தான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

**அமைச்சின் குறிக்கோள்**

- அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கம் தொடர்பில் அரச நிறுவனங்களை வலுப்படுத்தல்.
- இலங்கையினுள் மும்மொழி உபயோகத்தினை ஊக்கப்படுத்தல் மற்றும் விருத்தி செய்தல்.
- தேசிய சகவாழ்வை மேம்படுத்துவதற்கு தேவையான தலைமைத்துவம் மற்றும் வசதிகளை வழங்குதல்.
- தேசிய சகவாழ்வை மேம்படுத்தல் அத்துடன் அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்க அரச மற்றும் தனியார் துறை அமைப்புகளை ஒருங்கிணைத்தல்.

## 1.3 பிரதான பணிகள்

- தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய விடயப்பரப்பு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயப்பரப்பிற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடல்.

- தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகள்.

- இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் சகவாழ்வினை ஏற்படுத்துவதற்கு தேவையான கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துதல்.

- தேசிய மொழிகள் மற்றும் இணைப்பு மொழியைப் பயன்படுத்தி இனங்களுக்கிடையே சமூக ரீதியாகவும், சமய ரீதியாகவும் சிறந்த சூழலையும், அன்னியோன்னிய புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்கு வசதியளித்தல்.

## 1.4.அமைச்சின் அமைப்பு வரைப்படம்-2019

**தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு**

**நிறுவன கட்டமைப்பு**



### 1.5. அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள்

1. அரசகரும மொழிகள் திணைக்களம்

   தொ.பே –011- 2888934
   தொலைநகல்- 011 – 2883930
   மின்னஞ்சல்-comm@languagesdept.gov.lk

2. இந்து சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களம்

   தொ.பே – 011-2552643
   தொலைநகல்- 011-2552824
   மின்னஞ்சல்-

### 1.6. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்

1. அரசகரும மொழிகள் ஆணைக்குழு

   தொ.பே -011 - 2889482
   தொலைநகல்- 011 - 2875830
   மின்னஞ்சல்-olcommission@gmail.com

2. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

   தொ.பே – 011 - 3092910
   தொலைநகல்- 011 - 2884612
   மின்னஞ்சல்-nilet@sltnet.lk

3. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம்

   தொ.பே – 011 - 2877376
   தொலைநகல்- 011 - 2884612
   மின்னஞ்சல்-ngosecretarialtsl@gov.lk

4. தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நல்லிணக்கத்திற்குமான அலுவலகம்

   தொ.பே - 011-2343501
   தொலைநகல்-011-4354518

5. காணாமற் போண நபர்கள் தொடர்பான காரியாலயம்

   தொ.பே – 011-3687333
   தொலைநகல்- 011-2667098
   மின்னஞ்சல்-

**1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்**

| | கருத்திட்டத்தின் பெயர் | பங்களிக்கும் நிறுவனங்கள் | திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு- ரூ.மி | திட்டத்தின் காலம் |
|---|---|---|---|---|
| 01 | Initiative sustained peaceful Interethnic relations through Economics Development Activity (USAID) | USAID | 209.00 | 2018-2022 |
| 02 | National Languages Equality Advancement Project (NLEAP) | CANADA | 1460.00 | 2018-2023 |
| 03 | Social cohesion and Reconciliation Project (SCORE) USAID | USAID | 1780.00 | 2019-2021 |
| 04 | Strengthening Reconciliation Process (SRP) | EU | 3018.00 | 2018-2021 |
| 05 | Construction of Rain water Harvesting systems in Jaffna District (ONUR) | INDIA | ***** | **** |

# இரண்டாம்அத்தியாயம்

# முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

# 2.1. அமைச்சின் செயலாற்றுகை 2019

### 2.1.1.தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவு

**அறிமுகம்.**

தேசிய ஒருமைப்பாட்டு பிரிவினூடாக இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பினையும் சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்காக தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் கண்டு, செயற்படுத்துவதற்காகவும் இனங்களுக்கிடையில் கலாசார, சமூக மற்றும் சமயப் பின்னணிகளை பரஸ்பரம் விளங்கிக் கொள்வதற்கு ஏற்ற வசதிகளை வழங்குதல் இடம்பெறுகிறது.

அதன்மூலம் இலங்கையில் வாழும் அனைத்து இனங்கள் மற்றும் இனக் குழுக்களின் பாரம்பரியங்கள், அடையாளம், மற்றும் கலாச்சாரம் போன்றவற்றை பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவின் பணிகள்

- வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைய தேசிய சகவாழ்வு மேம்பாட்டுடன் தொடர்புடைய செயற்பாடுகளை அமுல்படுத்தல்.
- இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வினை ஏற்படுத்துவதற்காக பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டு அமுல்படுத்தல்.
- சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கான வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஊடாக தேசிய ஒருமைப்பாட்டினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர்கள் ஊடாக குறித்த மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் சகவாழ்வுடன் தொடர்புடைய பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்காக பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்.
- தேசிய ஒருமைப்பாட்டினை மேம்படுத்துவதற்கு குறித்த பங்காளர்களுடன் இணைந்து பல்வேறு மட்டங்களிலான கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

**சகவாழ்வு சங்க கருத்திட்டம் மற்றும் ஏனைய கருத்திட்டங்கள**

நாட்டின் தற்போதைய தேவைப்பாடுகள் மற்றும் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணைவாக பல்வேறு இனப் பிரிவுகளுக்கிடையில் ஒருமைப்பாடு, சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இலங்கையர் என்ற இனத்தை உருவாக்குவதற்குரிய சூழலை ஏற்படுத்துவது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பிரிவின் பணியாகும். அப்பணியினை நிறைவேற்றுவதற்கான தேசிய சகவாழ்வு, கலாசாரம், கலை, மொழி, சமய மற்றும் கலாசார விழாக்கள், விளையாட்டு மற்றும் ஓரங்கட்டப்பட்ட நிலைக்குள்ளான குழுக்களை வலுவூட்டுவதன் மூலம் பரந்த எல்லை ஒன்றுக்கு வழிவகுக்கும் குறிகோளுக்கேற்ப சமூகத்தின் கீழ்மட்டத்தில் உருவாக்கப்பட்ட சகவாழ்வு சங்கம் உதவிபுரிகிறது.

சகவாழ்வு மேம்படுத்தலுக்கும் மொழியைக் கற்றுக்கொள்வதற்காகவும் ஆர்வம் காட்டும் சாதாரண மக்களினால் சகவாழ்வுச் சங்கத்தை உருவாக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகப் பிரிவினுள் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாறான அடிப்படைச் சகவாழ்வுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களின் ஒத்துழைப்புடன் பிரதேச சகவாழ்வுச் சங்கத்தினை உருவாக்க முடிவதுடன், பிரதேச சகவாழ்வுச் சங்கத் தலைவர்களினதும் செயலாளர்களினதும் ஒத்துழைப்புடன் மாவட்டச் செயலாளரின் ஆலோசனையின் மாவட்ட சகவாழ்வுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்ட சகவாழ்வுச் சங்கங்களும் ஒன்றுகூடி தேசிய மாநாடு ஒன்று தேசிய மட்டத்தில் நடாத்தப்பட வேண்டுடியதுடன் அதன் ஒருங்கிணைப்பு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம், பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள சகவாழ்வுச் சங்கங்கள் ஊடாக பிரதேச மட்டத்தில் செயற்படும் அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள்,

தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

சிறு வியாபாரிகளின் வாழ்வாதார வழியை மேம்படுத்துதல், ஓரங்கப்பட்ட நிலைக்குள்ளாகியுள்ள நபர்களை அல்லது இனப் பிரிவினரை சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான நலன்புரி வசதிகளை வழங்குதல். அரசகரும மொழிகளான சிங்களம்.'.தமிழ் மற்றும் இணை மொழியான ஆங்கில மொழிப் பாவனை விருத்தி செய்தல், சமூகத்திற்குள் சட்டவிரோத மதுபாவனை மற்றும் ஆயுத கலாசாரத்தினை புறக்கணித்தல், போன்றவை தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம், கல்வி, கலாசாரம், கலை, மதம் மற்றும் விளையாட்டு போன்றவற்றை மேம்படுத்துவதற்காக பிரதேச மட்டத்தில் இவ்வாறான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் கருத்திட்டங்கள் மூலம் பிரதேச மட்டத்தில் நன்மைகள் பல மக்களுக்கு உரித்துடையதாகும். 2019ம் வருடத்தில் சகவாழ்வுச் சங்கம் ஊடாக 72 கருத்திட்டங்களுக்காக ரூபா. மில்லியன் 5.81 நிதி ஒதுக்கீடு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஊடகத்தின் மூலம் சகவாழ்வினை ஏற்படுத்துதல்- சுபாரத்தி வானொலி நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பிரிவின் குறிக்கோள் மற்றும் பணிகளான தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கத்தினை மேம்படுத்தல் ஆகிய விடயங்கள் பொது மக்களிடையே நிகழ்ச்சித்திட்டம் ஊடாக பிரபலமடையச் செய்வது காலத்தின் தேவைப்பாடாகும் ஊடக நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றான வானொலி நிகழ்ச்சித்திட்டமானது முன்னணி இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் அமைச்சின் நோக்கம், குறிக்கோள் மற்றும் விடயம் அமைச்சின் கீழ் இணைந்த நிறுவனங்களின் பணிகள் மக்களை சென்றடைவதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள தேசிய சேவை ஊடாக சுபாரதி எனும் வானொலி நிகழ்ச்சித் திட்டமானது சிங்கள மொழி மூலமும் தமிழ் தேசிய சேவை ஊடாக விடியும் வேளை எனும் வானொலி நிகழ்ச்சித்திட்டம் தமிழ் மொழி மூலம் ஒவ்வொரு திங்கட் கிழமையும் (பௌர்ணமி தினம் தவிர்ந்த) மு.ப. 7.00 மணி தொடக்கம் 8.00 மணி வரையும் ஒலிபரப்புச் செய்யப்படும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 10 சேவைகள் ஊடாக தினமும் பிரதான செய்தி அறிக்கைக்கு முன்னர் ஒலிபரப்புச் செய்யப்படும் செய்திக்கு முன் அறிவிப்பாக அமைச்சின் செய்தி ஒலிபரப்புச் செய்யப்படும். செய்தி அறிக்கையினை கேட்கும் நேயர்கள் தொடர்ச்சியாக



கேட்பதனால் செய்தி அறிக்கைக்கு முன்னரான தகவலினை ஒலிபரப்புச் செய்வதன் மூலம் அமைச்சு தொடர்பாக பிரஜைகளின் விழிப்புணர்வினை சுயமாக அதிகரிக்கச் செய்வதற்கு செய்திக்கு முன்னரான ஒலிபரப்பானது அனைத்துப் பிரதான செய்தி அறிக்கைகளுக்கு முன்னர் ஒலிபரப்புச் செய்யப்படும்.

2019ம் வருடம் சிங்களம் மற்றும் தமிழ் வானொலி நிகழ்ச்சித் திட்டங்கள் 90 நடாத்தப்பட்டுள்ளதுடன் இதற்காக ரூபா மில்லியன் 13.7 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாத்தளை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலுள்ள மாவட்டச் செயலகங்களிலிருந்து நேரடி ஒலிபரப்புச் செய்யப்பட்டுள்ளது.

**சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை**

இன பேதமின்றி அனைத்து இலங்கையர்களினது மத்தியில் பரஸ்பர நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்காக சமூகத்திலே ஓரங்கட்டப்பட்ட குழுவினருக்கு சமமான இடத்தினை வழங்குவதன் மூலம் பிரஜையாக சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான அடிப்படைச் சட்ட



ஆவணங்களைப் பெற்றுக்கொடுப்பது மற்றும் நிறுவனங்களின் மூலம்பெறக்கூடிய சேவைகளை ஒரே இடத்தில் வழங்குவதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்காக பதிவாளர் நாயகம் திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு, அரசகரும மொழிகள் ஆணைக்குழு, ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை பொலிஸ், பிரதேச செயலகம், ஊழியர் சேமலாப நிதி திணைக்களம், சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மின்சாரசபை, நகரசபை, பிரதேச சபை ஆட்பதிவு திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, தேசிய சிறுசர் பாதுகாப்பு அதிகாரசபை போன்ற அரச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படும் உத்தியோகத்தர்கள் சமூகமளித்திருந்தனர்.

ஒரே இடத்தில் இந்த அனைத்துச் சேவைகளும் பொதுமக்களுக்கு குறைவின்றி பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கபட்டுள்ளதுடன் இந்தச் சேவைகள் அனைத்தும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

உதாரணமாக தேசிய அடையாள அட்டைக்குத் தேவையான புகைப்படம் மற்றும் முத்திரை, பிறப்பு, விவாகம் மற்றும் மரணச் சான்றிதழ் போன்றவற்றுக்கான அறவீடுகள் மற்றும் புதிய விவாகப் பதிவுகள் அறவீடுகள் எதுவுமின்றி மேற்கொள்ள முடியும்.

இதன் மூலம் பொதுமக்களுக்கு குறுகிய நேரத்திற்குள் தமக்கு தேவையான சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.. இங்கே கீழே வழங்கப்படும் சேவைகளாவன குறிப்பிடப்பட்டவைகளாகும்.

- தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- பிறப்புச் சான்றிதழ் வழங்குதல், காலம் கடந்த பிறப்பினை பதிவு செய்தல், திருத்தம் செய்தல், அனுமான வயதுச் சான்றிதழ் போன்றவற்றை வழங்குதல்
- புதிய விவாகம் பதிவு செய்தல் -இங்கே திருமணமாகாமல் ஒன்றாக வாழுபவர்களுக்காக இலவசமாக திருமணப் பதிவு செய்யப்படும்.
- தொலைந்துபோன அடையாள அட்டைக்காக பொலிஸ் அறிக்கை இலவசமாக வழங்கப்படும்
- சமாதான நீதவானால் சான்றிதழ் வழங்கப்படும்
  இங்கு தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களுக்குரிய சத்தியப் பிரமாணம் என்பன வழங்கப்படும்.
- முதியோர் அடையாள அட்டை வழங்கப்படும்
  சிரேட்ட பிரஜைகளுக்காக புகைப்படம் இலவசமாக வழங்கப்படுவதுடன் முதியோர் அடையாள அட்டை வழங்கப்படும்.
- தமக்கு தேவையான மொழியில் (சிங்களம்.՛.தமிழ்.՛.ஆங்கிலம்) பிறப்பு.՛. இறப்பு.՛. விவாகம் போன்ற சட்ட ஆவணங்களை மொழி பெயர்த்தல்
- ஊழியர் சேமலாப நிதி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்
- நீர்க் கட்டணம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்

- சட்ட உதவி வழங்குதல்
- மின்சாரம் தொடர்பான பிரச்சினைகள்.
- நகரசபை மதிப்பீட்டு வரிப் பிரச்சினைகளுக்கான மதிப்பீட்டுப் பிரிவின் சேவையை வழங்குதல்.

2019 ஆம் வருடத்திற்குள் ரூபா மில்லியன் 12.1 செலவில் கம்பஹா, மட்டக்களப்பு, மாதளை, களுத்துறை, கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு உரிய பிரதேச செயலகங்கள் 12 ற்கு சட்ட ஆவணங்களை வழங்கும் நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதில் 9940 மக்கள் சேவையினை பெற்றுக்கொள்ளும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் சேவையினூடாக அந்த அந்த பிரதேச செயலகப்பிரிவின் மக்களுக்கு மகத்தான சேவை வழங்கப்பட்டுள்ளது.

**தேசிய ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தல்**

தேசிய ஒருமைப்பாட்டின் மூலம் நல்லதோர் சமூகத்தினை கட்டியெழுப்புவதற்காக முதலில் நாட்டு மக்களின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு கவனம் செலுத்த வேண்டும். இவ் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்ய முடியாது போவதால் ஏற்படும் சமூகத் தாக்கம் நாடடின் நிலையான வளர்ச்சிக்கு ஒரு தடையாகும். பௌதீக மற்றும் மனித வளங்கள் ஏற்றத்தாழ்வு சமத்துவமின்மை மற்றும் பொருளாதார க்'டங்கள் தோன்றுவதால் நமது நாட்டில் உள்ள மக்கள் சமூதாய ஒரங்கட்டலுக்கு உட்பட்டுள்ளார்கள். கல்வி, தொழில், சமூகப் பின்னணி, பாலினம் மற்றும்



பொருளாதார நிலை போன்ற பல்வேறு காரணிகளால் பெரியவர்கள், பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகள் போன்ற குழுக்கள் ஓரங்கட்டப்பட முடியும்.

அதன் படி அனைத்து குழந்தைகளுக்கும் சமமான கல்வியினை வழங்குவதன் கீழ் ஓரங்கட்டப்பட்ட நிலையிலுள்ள சமூகங்களின் குழந்தைகளுக்கு கல்விக்கான வசதிகளை வழங்குவதற்காக பெற்றோர்கள் இல்லாத அல்லது ஒரு பாதுகாவலரை உடைய அல்லது நகர ஏழை பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக நடாத்தப்படுகின்றது.

மேலும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பிரிவினூடாக இரண்டாம் மொழி தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் **"மொழியை கற்போம் மனதை வெல்வோம்"** நிகழ்ச்சித்திட்டத்திற்காக பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இந்த பாடசாலை உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் குறைந்த வசதிகளைக் கொண்ட



மாணவர்களின் கல்வியை எளிதாக்குவதோடு, அவர்களை கல்விக்கு உட்புகுத்தல், சமூகத்தினுள் பாதிப்புக்குள்ளான குழுக்களின் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியினூடாக அவர்கள் சமூகமயமாக்கல் உறுதிப்படுத்தப்படுகின்றது. 2019 வருடத்திற்குள் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபாய் மில்லியன் 28.6 நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

மேலும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பிரிவினூடாக மொழி கற்கை தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலையினை ஊக்குவிக்கும் நோக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் சிலவற்றிற்கு பொதுமக்கள் அழைப்பு முறைமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2019ஆம் வருடத்தில் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொதுமக்கள் அழைப்பு முறைமை பாடசாலைகள் மற்றும் அறநெறி பாடசாலைகள் 94ற்கு வழங்கப்பட்டுள்ளது.

**கலாச்சார பன்முகத்தன்மை பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம்**

மக்களிடையில் நிலவும் கலாசார பன்முகத்தன்மை பரிமாற்றுவதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டினை முன்னேற்றுவதன் நோக்கமாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப்பிரிவினூடாக பல்வேறு கலாசார நிகழ்ச்சிக்கு அனுசரனை வழங்கப்பட்டுள்ளது. தைப்பொங்கல் விழா, சுதந்திர தின விழா, புத்தாண்டு விழா, வேறு விழாக்கள், ரமழான் விழா மற்றும் நத்தார் பண்டிகை போன்றன அனைத்து இனங்களும் பங்குபற்றும் வகையில் சமய மற்றும் கலாசார விழாவிற்காக நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. 2019 ஆம் வருடத்தில் நாடுபூராகவும் நடாத்தப்பட்ட 49 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூபாய் மில்லியன் 3.74 நிதி ஒதுக்கீடு மாவட்ட.·. பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டது..

**கலாச்சார புத்தகங்களை அச்சிடுதல்**

பிற மொழிகள் மற்றும் கலாசாரங்களை மதிப்பளிப்பதற்கு மக்களை ஊக்குவிப்பதற்காக சிங்கள மொழியில் எழுதப்பட்ட கம்பெரலிய மற்றும் மடொல்துவ நவகதா போன்ற தமிழ் மொழியிலும் தமிழ் மக்கள், தமிழ் இராமாயண புத்தகங்களை சிங்கள மொழியிலும் அச்சிட்டு சிங்கள/ தமிழ் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குதல் மற்றும் சிங்களம் தமிழ் உள்ளடக்கப்பட்ட அனைத்து இனங்களுடன் ஒரு குறிக்கோளுக்காக தோற்ற வேண்டும் என்பதனை பிரபலமான தமிழ் பௌத்தர் என்ற நூல் அச்சிடுகை இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே அனைத்து தேசிய ஒருமைப்பாடு மற்றும் சகவாழ்வுடன் கூடிய நல்ல நாட்டினை உருவாக்குவதற்காக செயற்படுத்தப்படும்.

நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையில் பௌத்த பிரார்த்தனை நூல் பகிர்ந்தளிப்பதில் சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்ததுடன் பெயர்ணமி தினங்களில் ஒழுக்கநெறி அனுட்டிக்கும் பக்த்தர்களுக்காக இந்த புத்தகம் வழங்கப்பட்டது. 2019ஆம் வருடத்தில் கண்டி ஸ்ரீ தலதா மாளிகை, பிலியந்தல அசோக்காராமய, வத்தளை ஹுந்தல புராதன விகாரைகள் போன்ற சமய ஸ்தலங்களில் ஒழுக்கநெறி அனுட்டிக்கும் பக்தர்களுக்கு பௌத்த பிரார்த்தனை புத்தகமும் அமைச்சினூடாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களில் பாடசாலை மாணவர்களுக்கு கிராம பிறழ்வு, மடொல்துவ, கிராமியக்கதை, இராமாயணம் போன்ற புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் கலாசார புத்தகங்கள் அச்சிடுதல் மற்றும் வழங்கப்பட்டமைக்காக 9.86 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது.

**க.பொ.த சாதாரண தரத்தில் இரண்டாம் மொழியில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டுதல்.**

அரசகரும மொழிக் கொள்கை பயிற்சி நடைமுறைப்படுத்தும் நோக்கில் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் மேற்கொள்ளப்பட்ட **"தெரிந்தால் கற்பியுங்கள் தெரியாவிட்டால் கற்றுக்கொள்ளுங்கள்"** எனும் வானொலி நிகழ்ச்சியினை கேட்டு 2018ம் வருடத்தின் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் இரண்டாம் மொழியில் விசேட சித்தியடைந்த மாணவ மாணவிகளுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வானது 2019.07.18ம் திகதி அலரி மாளிகையில் கௌரவ பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இங்கு க.பொ.த சாதாரண



தரப் பரீட்சையில் இரண்டாம் மொழி பாடத்தில் விசேட சித்திப்பெற்ற 3130 பாடசாலை மாணவர்களுக்காக பாடசாலை சீருடைத்துணி மற்றும் புத்தகத் தொகுதியும் சிங்களமொழி மாணவர்களுக்காக தமிழ் கிராமிய கதை, இராமாயணம் போன்ற புத்தகங்களும், தமிழ் மொழி மாணவர்களுக்காக கிராமிய பிறழ்வு மற்றும் மடோல்துவ போன்ற புத்தகங்களும் வழங்காப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர்களுக்காகவும் ஆசிரியர்களுக்காகவும் விருது மற்றும் பரிசு என்பன வழங்கப்பட்டுள்ளது.

### 2.1.2.மொழி உரிமைகள் பிரிவு

**அறிமுகம்**

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு ஸ்தாபித்ததன் நோக்கம், அரசகரும மொழிக்கொள்கையை வினைத்திறனுடன் செயற்படுத்துவது மற்றும் சகவாழ்வை மேம்படுத்துவதன் மூலம் தேசிய ஒற்றுமையுடன் அனைத்து பிரஜைகளுக்கும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கும் சூழலை அமைத்துக் கொடுப்பதற்காகும்.

மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காக மொழி உரிமைகள் பிரிவின் ஊடாக அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவது தொடர்பாக மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்குரிய பல்வேறு கொள்கைகளை திட்டமிடுதல், நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல், சேவை வழங்கல், வசதியாக்கல் மற்றும் பின்னூட்டல்கள் போன்ற பல்வேறு விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மொழி உரிமைகள் பிரிவின் நோக்கம்**

- அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவதற்குரிய கொள்கைகளை திட்டமிடுதல்.
- அரச சேவையில் இருமொழியாக்கல் தொடர்பாக தேவையான பின்னணியை உருவாக்குதல்.
- அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவதற்காக பொது மக்களை வலுப்படுத்தல்.
- மொழி பரவலாக்கல் மற்றும் மேம்பாட்டிற்கு ஏற்ப இலங்கை மக்களிடையே நேர்மறையான எண்ணங்களை ஊக்குவித்தல்.

**மொழி உரிமைகள் பிரிவின் கடமைகள்**

- அரச நிறுவனங்களில் மொழித் திட்டமிடல் செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தல்.
- அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவது தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- அமைச்சின் விடயதானத்திற்குரிய பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச தினங்களை கொண்டாடும் செயற்திட்டங்களை நடாத்துதல்.
- நிறுவனங்களில் பெயர் பலகைகள் மும்மொழிகளிலும் அமைப்பதற்கு வசதியாக்கல்களை மேற்கொள்ளல்.
- அரச நிறுவனங்களிற்காக அத்தியவசியமான படிவங்களை மும்மொழிகளில் மொழிப்பெயர்த்து அச்சிடுவதற்கு பங்களிப்புச் செய்தல்.
- அரசகரும மொழிக்கொள்கை மீறல் தொடர்பாக முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வெளிநாட்டு உதவி கருத்திட்டங்களுக்கான பணிகளை திட்டமிடல் மற்றும் செயல்படுத்துவதற்காக அமைச்சு உதவி வழங்கள்

**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**
**மொழி உரிமைகள் பிரிவுக்கான நிதி முன்னேற்றம்**




| *இல* | *மொத்தம்* | *42.00* | *21.79* | *92.29மூ* |
|---|---|---|---|---|
| | | *உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூ.்.மில்)* | *உண்மைச் செலவு (ரூ.்.மில்)* | *விகிதம்* |
| *1* | அரச நிறுவனங்களில் மும்மொழிப் பெயர் பலகைகளை நிறுவுதல் | 2.45 | 2.546 | 104மூ |
| *2* | அரச நிறுவனங்களில் பயன்படும் படிவங்களை மும்மொழிகளிலும் மொழிப்பெயர்த்தல். | 1.42 | 0.686 | 48மூ |
| *3* | நாடு பூராகவும் மொழிக் கொள்கையினை அமுல்ப்படுத்தல் தொடர்பான செயலமர்வுகளை நடாத்தல் | 5.07 | 4.90 | 97மூ |
| *4* | அரசசரும மொழிக் கொள்கைகள் தொடர்பாக விஷேட நிகழ்ச்சித் திட்டம் | 2.00 | 2.00 | 100மூ |
| *5* | அமைச்சின் குறிக்கோளுக்கான தேசிய மற்றும் சர்வதேச தினத்தினை கொண்டாடுதல் | 8.44 | 6.951 | 82மூ |
| *6* | 1956 மொழி அழைப்பு மையத்தினை மேம்படுத்தல் | 0.78 | 0.776 | 99மூ |
| *7* | கொழும்பு கல்வி வளையத்தின் கீழ் உள்ள சிங்கள பாடசாலைகளில் மொழிக்கல்வி வசதிகள் தொடர்பான நிகழ்ச்சிகள் | 0.539 | 0.539 | 100மூ |
| *8* | 2018 க.பொ.த உயர்தரத்தில் இரண்டாம் மொழியில் (சிங்களம்.்: தமிழ்) விஷேட புள்ளிகள் பெற்ற மாணவர்களை பாராட்டும் நிகழ்ச்சிகள் | 17.766 | 17.766 | 100மூ |
| *9* | மொழி மேம்பாட்டுத்திட்டம்-வட மாகாண மையம் | 1.917 | 0 | 0மூ |
| *10* | மொழி மேம்பாட்டுத்திட்டம்- வட மாகாண மையம் | 1.621 | 1.621 | 100மூ |

### 2.1.2 நிர்வாகப் பிரிவு
**அறிமுகம்**

அமைச்சில் சிறந்த காரியாலய நிர்வாக சூழலை கொண்டு நடாத்தல், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமை செய்தல், உத்தியோகத்தர்களது வேலை தொடர்பான தேவைகளை பூர்த்தி செய்தல், மற்றும் அமைச்சின் சேவைகளை அமுல்படுத்துவதற்கு உதவி புரிதல் போன்றன நிர்வாகப் பிரிவின் பிரதான நோக்கங்களாகும்.

**நிர்வாகப்பிரிவின் நடவடிக்கைகள்**

- அமைச்சின் உள்ளக நிர்வாகம்.
- அமைச்சின் கீழு இணைந்துள்ள நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்
- பதவி அனுமதி பெறல்.
- ஆட்சேர்ப்பு திட்டங்களை உருவாக்கள்.
- நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு தொடர்பான நடவடிக்கைகள்.
- தனியார் கோவை நடாத்துகை.
- ஒழுக்கம் தொடர்பான நடவடிக்கைகள்.
- பயிற்சி நடவடிக்கைகள்.
- கட்டிடம், வாகனம் உள்ளடங்களாக அனைத்து பௌதீக வளங்களினதும் நடாத்துகை.
- பாராளுமன்ற உபதேச செயற்குழுவினை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- அமைச்சரவைப் பத்திரிகை தயாரித்தல்.

### 2.1.3 திட்டமிடல் பிரிவு
**அறிமுகம்**

திட்டமிடல் பிரிவானது, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் பிரதான பிரிவுகளில் ஒன்றாகும்.

அடையப்பெறும் பெறுபேறுகள், வினைத்திறன், விளைத்திறன் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக துறைசார் அடிப்படையில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பன திட்டமிடல் பிரிவில் மேற்கொள்ளப்படும். மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உயர் முகாமைத்துவ, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு முன்வைக்கப்படும்.

**திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகளாவன:**

- அமைச்சின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், வருடாந்த செயலாற்றுகைத் திட்டம் என்பவற்றை தயாரிக்க அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு.

- அமைச்சு அடையாளம் கண்டுள்ள முன்னோடி கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதனை ஒருங்கிணைத்தல்.

- மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் அதனை அமைச்சின் செயலாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம், வெளிநாட்டு உதவி மற்றும் வரவு செலவு திட்ட மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் ஏனைய அக்கறைகொண்ட பிரிவினர்களுக்கு சமர்பித்தலும்.

- முன்னேற்றம் மற்றும் செயற்பாட்டு திட்ட அறிக்கையை அமைத்து வரவு செலவு தொடர்பான கலந்துரையாடலில் பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்.

- அமைச்சின் தரவுகளை பராமரித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் விருத்தி செய்தல்.

### 2.1.4 கணக்குப் பிரிவு
**அறிமுகம்**

இந்தப்பிரிவின் ஊடாக நிதி சேவைகள் வழங்கும் நிவடிக்கைககளை ஒருங்கிணைத்தல் அத்துடன் குறித்த பிரிவுகளை ஒருங்கிணைத்து அமைச்சுக்கான சாதகநிலையான நிதிசார் தகவல்களை மற்றும் நிதி முகாமைத்துவ முறைமையொன்றை தாபித்து பேணப்படுகிறது.

**கணக்குப் பிரிவின் பிரதான பணிகள்**

- பிரதம கணக்காளர் என்ற வகையில் அமைச்சின் செயலாளருக்கு அமைச்சின் நிதிக் கடப்பாடுகளை பூர்த்தி செய்யவும் பாராளுமன்றத்திற்கு வகைப்பொறுப்புக்கூறவும் உதவுதல்.
- அரசாங்கத்தின் நிதி விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கி செயற்படுதலை உறுதி செய்தல்.
- நிதி முகாமைத்துவம் உட்பட சிறந்த நிதி கணக்கீட்டு முறைமையை தாபித்தலும் பராமரித்தலும்.
- நிதி அறிக்கைகள் மற்றும் வரவு செலவு தேவைகளை தயாரித்தல்.'.இற்றைப்படுத்தல்.'.மீள்பார்வை செய்தல் மற்றும் பூர்த்தி செய்வதற்காக திறைசேரி, அமைச்சுக்கு கீழ்வரும் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகள்.
- நிதி திட்டமிடல் மற்றும் வரவு செலவை தயாரித்தல்.
- உரிய நேரத்திற்கு மற்றும் துல்லியமான நிதி அறிக்கையிடலை உறுதிப்படுத்தல்.
- அமைச்சின் சொத்துக்களை முகாமை செய்தல்.

**2.1.5. உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

அமைச்சில் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் அணைத்து தளத்திலும் மேற்கொள்ளப்படும் சேவைகள் மற்றும் பணிகளை மீளாய்தல், அளவிடுதல், மதிப்பிடுதல், அத்துடன் உள்ளக நிர்வாக முறையில் விடய பங்களிப்பு தொடர்பாக அறிக்கை இடுவதன் மூலம் முகாமைத்துவத்திற்கு உதவுதல் இப்பிரிவின் நோக்கமாகும்.

**உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பணிகள்**

- பிழைகள் மற்றும் மோசடிகள் தடுப்பதற்காகவும் கட்டுப்பாட்டு முறைகளை வலுப்படுத்தவும் அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களில் அமுலாக்கப்படும் உள்ளக நிர்வாக முறைமையின் வெற்றிக்கான தன்மையை மதிப்பிடலும் உள்ளக நிர்வாகத்தை பலப்படுத்த உதவுதல்.
- கணக்குகள் மற்றும் வேறு அறிக்கைகளின் நம்பகத்தன்மையை நிர்ணயித்தல் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு முறைகளினால் சரியான நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றனவா என்பதை பரிசீலனை செய்தல்.
- நிறுவனத்தின் பதவியணியினருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அவர்களின் செயலாற்றுகையின் தரத்தை மதிப்பீடு செய்தல்.
- அமைச்சு மற்றும் அதன் கீழ் இருக்கின்ற நிறுவனங்களின் சொத்துக்களை எல்லா வகையான பாதிப்புகளில் இருந்தும் எவ்வளவு தூரம் பாதுகாக்கப்படுகிறது என்பதை தேடிப்பார்த்தல்.
- தாபனக் கோவை, நிதிக்கோவை, பொது நிர்வாகம், திறைச்சேரி மற்றும் வேறு சுற்றறிக்கை மற்றும் நெறிப்படுத்துகை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை கண்காணித்தல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் விசேட விசாரணைகளை நடாத்தல்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்களை நடாத்தல்.
- பணிகள், திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றம் மற்றும் எந்த அளவில் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அளவுத்திட்டங்கள் இலக்கினை அடைவதை நோக்கியதாக உள்ளன என்பதை மதிப்பிடுதல்.
- காலத்துக்கு காலம் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களம் வெளியிடும் வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்குறுத்தல்களை கடைபிடித்து, குறித்த ஒவ்வொரு வருடத்திலும்

காலண்டுக்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்தல், அத்துடன் அந்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தை உறுதிசெய்ய தொடர் செல் (கழடடழற -ரி) நடவடிக்கைகளை எடுத்தல்.

### 2.1.6. நல்லிணக்கத்தை நோக்கமாகக் கொண்ட பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூ உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டு கருத்திட்டம்

***அறிமுகம்***

*நல்லிணக்கத்தை நோக்கமாகக் கொண்ட பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு மேம்பாட்டு கருத்திட்டமானது இல. 17/2020/705/006 மற்றும் 26.09.2017 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஒப்புதலுடன் செயல்படுத்தப்பட்ட அதேவேளை இதன் மூலம் ஓரங்கட்டப்பட்ட நகர்ப்புற / கிராமப்புற / தோட்ட துறைகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, முழுதேசத்தையும் உள்ளடக்கும் வண்ணம் செயற்படுத்துவதற்கு 10.08.2018 திகதி சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு சம்பந்தமாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஒப்புதல் அளித்த கருத்திட்டமாகும். அதற்கிணங்கஇ குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திஇ கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான சூழலை உருவாக்கி அனைத்து சமூகங்களும் பயன்பெறும் வகையில் இனங்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் இந்த கருத்திட்டம் செயல்படுத்தப்படும்.*

*வேறாக்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு உட்பட்டு அனைத்து சமூகங்களுக்கும் பயனளிக்கும் வகையில் திட்டங்களைத் தேர்ந்தெடுத்தல்இ திட்டமிடுதல்இ மதிப்பீடு செய்தல்இ செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் கிராம மட்ட சமூக அடிப்படையிலான அமைப்புகளின் (உதா. சகவாழ்வுச் சங்கங்கள்), கிராமப்புற, பிரதேச, மாவட்ட அலுவலர்களின் ஆற்றலை உபயோகப்படுத்தி அரசியல் தலைமையின் வழிகாட்டுதலுடன் பொருத்தமான முறையில் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.*

### 1. *உட்கட்டமைப்பு மேம்பாட்டு கருத்திட்டங்கள்*

*உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டின் கீழ் அமைச்சினால் அடையாளம் காணப்பட்ட கிராமிய மட்ட கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்ற அதேவேளைஇ ஒரு குடும்பம் அல்லது பல குடும்பங்களுடன் இணைந்து மேற்கொள்ள முடியாத பொதுவான தேவைகள் மற்றும் பாரிய அளவிலான அபிவிருத்தி திட்டங்களில் உள்ளடக்கப்படாத எதிர்பாராத இடர்கள் / ஆபத்தான சந்தர்ப்பங்களில் மீள்வதற்காக பயன்படுத்தப்படும் உட்கட்மைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் இது கவனத்தில் கொள்ளப்படுகின்றது.*

### 2. பொருளாதார வலுவூட்டல்

*பொருளாதார வலுவூட்டலின் கீழ் வறுமையில் பாதிக்கப்பட்டுள்ள அல்லது ஓரங்கட்டப்பட்ட கிராமப்புற மற்றும் நகர்ப்புற குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கான வசதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. இதன் கீழ் தற்போது மேற்கொள்கின்ற சுயதொழிலை மேம்படுத்துவதற்கு அல்லது புதிதாக தொடங்குவதற்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்படுகிறது.*

*(உதா – தையல் இயந்திரம், விவசாய உபகரணங்கள், நீர் இயந்திரம், அலகு சாதன உபகரணங்கள், உணவுக்கான பாவணைப் பொருட்கள்……) அடையாளம் காணப்பட்ட பயனாளி குறைந்த வருமானம் ஈட்டக்கூடியவர் மற்றும் உரிய பணிகளில் ஈடுபடுகிறவர் என கிராம உத்தியோகத்தரின் பரிந்துரையுடன் பிரதேச செயலாளரின் உப கையொப்பத்துடன் உபகரணங்களைக் கோரும் விண்ணப்பங்களை மாவட்ட செயலாளர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். அதுவரை உபகரணங்கள்*

விநயோகிக்ப்பட மாட்டாது என்பதுடன் உணமையில் உரிய பணியில் நிலைத்திருக்க விடுக்கப்படும் அழைப்பாகும். பயனாளியுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு பொருட்கள் வழங்கப்படும்.

**குடும்பஙளை தெரிவு செய்வதற்கான வரையறைகள்**

- வறுமையில் வாடும் அல்லது ஓரங்கட்டப்பட்ட கிராமப்புற மற்றும் நகரபுற குறைந்த வருமானம் பெறும் குடும்பமாக இருத்தல்/ பெணளை சார்ந்த குடும்பமாக இருத்தல்/ ஊனமுற்ற குழந்தைகள் உள்ள குடும்பமாக இருத்தல்.
- உரிய பணியில் நலைத்திருப்பதற்கு நபர் ஏதேனும் பயிற்சியைப் பெற்றிருத்தல் அல்லது ஏற்கனவே பணியில் ஈடுப்பட்டிருத்தல்.

**ஒதுக்கீடுகள் மீதான நிதிக் கட்டுப்பாடுகள்**

- ஒரு குடும்பத்திற்கு வழங்கக்கூடிய அதிகபட்ச வரைறை ரூ. 50,000.00 ஆகும்.
- அத்தொகையைப் பார்க்கிலும் அதிகமாக உள்ள சந்தர்ப்பத்தில் பயனாளி பணம் செலுத்த ஒப்புக்கொண்டால்இ அதற்காகன வாய்ப்பு வழங்கப்படலாம்.

**அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

பொருளாதார கஷ்டங்களால் பாதிக்கப்படுகின்ற குழந்தைகள் மற்றும் கஷ்ட பாடசாலைகளை தெரிவு செய்து அவர்களை வலுவூட்டுவதற்கான கருத்திட்டத்தை இதன் கீழ்இ அறிந்துக்கொள்ளப்படுகின்றது.

பாடசாலைகளுக்கான நீர் மற்றும் சுகாதார வசதிகள்

பொதுவான வசதிகளை வழங்குதல் (மேசைகள்இ கதிரைகள், கட்டிடங்கள்இ விளையாட்டு மைதான மேம்பாடு போன்றவை)

கற்றல் ஆதார தொகுப்புகளை வழங்குதல். (கணினி / ஸ்மார்ட் போர்டுகள் போன்றவை)

பாடசாலை வேலிகள் மற்றும் வாயில்களை நிர்மானித்தல்.

**புள்ளிவிவர எண்கள்** 2.1

நல்லிணக்கத்தை நோக்காகக் கொண்ட பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு மேம்பாட்டு கருத்திட்டம் (1 ஆம் கட்டம்)

| தொ.இல | மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை (ரூ) | விடுவிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை (ரூ) | மீள் கொள்முதல் |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 273,349,570.32 | 264,926,684.97 | 208,468,885.45 |
| 2 | களுத்துறை | 16,225,832.35 | 16,225,832.35 | |
| 3 | கேகாலை | 20,297,534.09 | 20,297,481.70 | |
| 4 | நுவரெலியா | 4,500,000.00 | 3,500,000.00 | |
| 5 | புத்தளம் | 1,830,149.19 | 1,830,149.19 | |
| 6 | அம்பறை | 20,108,325.15 | 20,108,325.15 | |
| 7 | யாழ்ப்பாணம் | 32,000,000.00 | 32,000,000.00 | |
| 8 | இரத்தினபுரி | 6,974,105.98 | 6,974,105.98 | |
| 9 | கம்பஹா | 43,100,000.00 | 43,100,000.00 | |
| 10 | மாத்தறை | 16,522,403.96 | 15,922,403.96 | |
| 11 | அனுராதபுரம் | 10,000,000.00 | 10,000,000.00 | |
| 12 | கண்டி | 52,594,014.00 | 44,164,014.00 | |
| 13 | காலி | 3,208,850.00 | 3,208,850.00 | 2,670,000.00 |
| 14 | பொனலன்னறுவை | 977,317.60 | 977,317.60 | |
| | **மொத்தம்** | **501,688,102.64** | **483,235,164.90** | **211,138,885.45** |

**புள்ளிவிவர எண்கள்** 2.2

நல்லிணக்கத்தை நோக்காகக் கொண்ட பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு மேம்பாட்டு கருத்திட்டம் (2 ஆம் கட்டம்)

| தொ.இல | மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை (ரூ) | விடுவிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை (ரூ) | விடுவிக்கப்படவேண்டிய ஒதுக்கீட்டுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாண | 75,582,089.78 | 66,082,089.78 | 9,500,000.00 |
| 2 | அம்பாறை | 15,580,000.00 | 15,580,000.00 | |
| 3 | திருகோணமலை | 6,900,000.00 | 6,900,000.00 | |
| 4 | மட்டக்களப்பு | 80,313,300.00 | 80,313,300.00 | - |
| 5 | மன்னார் | 25,140,000.00 | 25,140,000.00 | - |
| 6 | முல்லைத்தீவு | 45,080,000.00 | 45,080,000.00 | - |
| 7 | வவுனியா | 14,161,611.85 | 14,161,611.85 | - |
| 8 | கிளிநொச்சி | 1,000,000.00 | 1,000,000.00 | - |
| 9 | 2018 பொறுப்புகள் | 40,000,000.00 | 40,000,000.00 | - |
| 10 | நிர்வாகம் | 1,500,000.00 | 660,992.96 | 839,007.04 |
| | **மொத்தம்** | **305,257,001.63** | **294,917,994.59** | **10,339,007.04** |

### 2.1.7. அபிவிருத்தி உதவி கருத்திட்டங்கள் அறிமுகம்

அபிவிருத்தி உதவித் கருத்திட்ட இல. 19/2264/131/019 மற்றும் 18.09.2019 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக தேசிய ஒருமைப்பாடுஇ அரசகரும மொழிகள்இ சமூக முன்னேற்றம் மற்றும் இந்து மத விவகார அமைச்சின் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளிலிருந்து தேசிய ஒருமைப்பாட்டு பிரிவு மற்றும் அரசகரும மொழிகள் பிரிவின் சமூக முன்னேற்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஒதுக்கீடுகளை மாற்றுவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றது. அதற்கிணங்கஇ ரூ.369.99 மில்லியன் ஒதுக்கீடானது அமைச்சின் சமூக முன்னேற்ற விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளதுடன்இ குறித்த ஒதுக்கீட்டின் ஊடாக அபிவிருத்தி உதவி கருத்திட்டம் செயற்படுத்தப்படும்.

#### 1) உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டின் கீழ் அமைச்சினால் அடையாளம் காணப்பட்ட கிராமிய மட்ட கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்ற அதேவேளைஇ ஒரு குடும்பம் அல்லது பல குடும்பங்களுடன் இணைந்து மேற்கொள்ள முடியாத பொதுவான தேவைகள் மற்றும் பாரிய அளவிலான அபிவிருத்தி திட்டங்களில் உள்ளடக்கப்படாத எதிர்பாராத இடர்கள் / ஆபத்தான சந்தர்ப்பங்களில் மீள்வதற்காக பயன்படுத்தப்படும் உட்கட்மைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் இது கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

- கிராமப்புற / தோட்டப்புற வீதி அபிவிருத்தி
- பொது மக்களுக்கான நீர் வசதிகள்
- பொது குளியல் இடங்கள் / சுகாதார வசதிகளின் மேம்பாடுகள்
- சேவை மையங்கள் (மகப்பேறு இல்லங்கள் / சிகிச்சை நிலையங்கள்)
- சிறுவர் இல்லங்கள் மற்றும் வயோதிபர் இல்லங்களை மேம்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.

#### 2) பொருளாதார வலுவூட்டல்

பொருளாதார வலுவூட்டலின் கீழ் வறுமையில் பாதிக்கப்பட்டுள்ள அல்லது ஓரங்கட்டப்பட்ட கிராமப்புற மற்றும் நகர்ப்புற குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கான வசதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்த திட்டத்தின் நோக்கம் குடும்ப அலகுக்குள் செலவினங்களைக் குறைப்பதுஇ கூடுதல் வருமானத்தை ஈட்டுவது மற்றும் பிரதான வருமான மார்க்கமாக மனை ரீதியான விவசாயம்இ தொழில்துறை அல்லது சேவைத்துறைகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதாகும். அதன் பிரகாரம்இ குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கீழ் காணும் விடயங்களின் கீழ் ஏற்கனவே உள்ள சுயதொழிலை மேம்படுத்துவதற்கு அல்லது புதிதாக தொடங்குவதற்குத் தேவையான வசதிகளை செய்திகொடுத்தல்.

1. விவசாய நடவடிக்கைகள்
2. சுயவேலைவாய்ப்பு (உணவு தொடர்பான உற்பத்திகள்இ ஆடை தைத்தல் போன்றவை ...)
3. கைவினைப் பொருட்கள்
4. தச்சுத் தொழில்
5. கால்நடை பராமரிப்பு
6. மீன்வளம் தொடர்பான செயற்பாடுகள்
7. தொழில்துறை நடவடிக்கைகள்
8. நடமாடும் வர்த்தக சேவை தொடர்பாக வசதிகளை மேற்கொள்ளுதல்.

***சமூக மேம்பாட்டிற்கான கல்வி அபிவிருத்தி***

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் கஷ்டமான பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து சமூக முன்னேற்றம் தொடர்பாக அவர்களை வலுவூட்டுவதற்கான கருத்திட்டமானது இதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

- பாடசாலைகளுக்கு நீர் மற்றும் சுகாதார வசதிகள்
- பொதுவான வசதிகளை வழங்குதல்

(மேசைகள், கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றின் அபிவிருத்தி)

- கற்றல் ஆதர கருவிகளை வழங்குதல் (கணினி வசதிகள் / ஸ்மார்ட் போர்டுகள் போன்றவை)
- பாடசாலை வேலிகள் மற்றும் வாயில்களை அமைத்தல்.
- போக்குவரத்து சிரமங்கள் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு சைக்கள்களை பெற்றுக் கொடுத்தல்.

**புள்ளிவிவர குறிப்புகள் எண் 8.1**

**அபிவிருத்தி ஆதரவு திட்டங்கள் – 2019**

| தொ.இல | மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை (ரூ) | விடுவிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை (ரூ) | மீண்டும் கையகப்படுத்தல் |
|---|---|---|---|---|
| 1 | முல்லைத்தீவு | 24,530,000.00 | 12,830,000.00 | |
| 2 | மொனராகலை | 15,496,009.98 | 15,496,009.98 | |
| 3 | கிளிநொச்சி | 46,550,000.00 | 22,550,000.00 | |
| 4 | யாழ்ப்பாணம் | 92,338,145.30 | 24,344,970.00 | |
| 5 | மன்னார் | 68,654,000.00 | 62,629,000.00 | |
| 6 | கொழும்பு | 262,282,857.23 | 21,257,206.11 | 65,617,504.95 |
| 7 | கண்டி | 10,347,000.00 | 9,047,000.00 | |
| 8 | கேகாலை | 4,612,417.47 | 3,612,417.47 | |
| 9 | அம்பாறை | 14,907,000.00 | 14,907,000.00 | |
| 10 | குருநாகல் | 1,458,294.00 | 1,458,294.00 | |
| 11 | பதுளை | 6,600,000.00 | - | |
| 12 | மட்டக்களப்பு | 35,550,000.00 | 35,550,000.00 | |
| 13 | நுவரெலியா | 30,564,076.10 | 6,464,076.10 | |
| 14 | புத்தளம் | 983,550.96 | - | |
| 15 | இரத்தினபுரி | 3,545,837.93 | 3,545,837.93 | |
| 16 | கம்பஹா | 3,799,631.70 | 2,599,631.70 | |
| 17 | மாத்தளை | 1,500,000.00 | | |
| 18 | காலி | 700,000.00 | | |
| | **மொத்தம்** | **624,418,820.67** | **236,291,443.29** | **65,617,504.95** |

## 2.1.8. மாவட்ட நல்லிணக்க குழுக்கள் அறிமுகம்

முப்பது ஆண்டுகால யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார தாக்கங்கள் போன்று இன, மத மற்றும் பிராந்திய தீவிரவாதத்தினால் பாரிய தனிமைப்படுத்தலும், தீவிரவாதம் போஷிக்கப்பட்டதாக காணப்பட்டதால் அந்நிலையை ஒடுக்குவதற்கு, தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் ஒரு பொறிமுறைளின் ஊடாக இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நல்லிணக்கக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குழுவின் அமைப்பு

1. மாவட்ட செயலாளர் (அழைப்பாளர்)
2. உள்ளக மதத்தலைவர்கள் (பௌத்தம், கிறிஸ்தவம், இந்து மற்றும் இஸ்லாம் மதங்கள்)
3. பொலிஸ் அதிகாரி
4. தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களாக ஏனையவர்கள் (ஓய்வு பெற்ற வழக்கறிஞர்கள், அதிபர்கள் போன்றோர்)

**நோக்கங்கள்**

மாவட்ட மட்டத்திலான நல்லிணக்க குழுவின் நோக்கங்கள் பின்வருமாறு.

1. பிரதேசத்தில் மத மற்றும் இன மோதல்களின் காரணங்கள் மற்றும் பின்னணியைப் அராய்தல் மற்றும் அப்பிரச்சினைகள் தொடர்பாக தலையீட்டை மேற்கொள்வதற்கு பொருத்தமான உத்திகள் மற்றும் அணுகுமுறைகளை வகுத்தல்.

2. வழிபாட்டுத் தலங்கள் மீதான மதத் தாக்குதல்களால் ஏற்படும் பதற்றத்தை ஆராய்ந்து மோதலைத் தீர்க்க விரைவான பதில்களை வழங்குதல்.

3. மத மற்றும் இன மோதலுக்கான அடிப்படை காரணத்தை ஆராய்தல் மற்றும் மோதல்களை ஏற்படுத்துவோர் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்டோர் மற்றும் அதற்கு பொறுப்புடையோருக்கு மோதல் தீர்க்கும் அணுகுமுறையின் மூலம் இது சம்பந்தமாக தலையிவதற்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.
4. பதட்டங்களையும், நிகழ்வுகளையும் மிகவும் சீரான கண்ணோட்டத்தில் மதிப்பாய்வு செய்து, இணக்கமாக சிக்கல்களைத் தீர்க்க குழுக்களிடையே உரையாடலை மேற்கொள்ளுதல்.

5. பதட்டங்கள் மற்றும் மத மற்றும் இனவெறி சம்பவங்கள் குறித்த தரவுத்தளத்தை மாவட்ட அலுவலகத்தின் உதவியுடன் பராமரித்தல்.
6. தேவையான இடங்களில் கள ஆய்வுகளை நடத்துதல், உள்ளூர் சூழல்களின் பகுதிகளை அடையாளம் காணுதல் மற்றும் பொருத்தமான நுட்பங்கள் மற்றும் அணுகுமுறைகள் மூலம் மோதல்களுக்கு தீர்வுகளை மேற்கொண்டு, மத்தியஸ்தம் வகித்து, கலந்துரையாடுதல்.
7. குழுக்களால் பிரச்சினைகள் அல்லது முரண்பட்ட வாய்மொழி கருத்துக்கள் அல்லது வெறுக்கத்தக்க மொழி பயன்பாடு ஆகியன தொடர்பாக செயற்படல் வேண்டும்

## 2.1.9. காணாமல் போனோர் தொடர்பாக சான்றுப்படுத்தப்பட்ட பெருநர்களுக்கு ரூ 6000.00 இடைக்கால நிவாரண நன்கொடையை வழங்குதல்

**அறிமுகம்**

இலங்கை அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணிகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, யுத்தம் மற்றும் மோதல் காரணமாக பொது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம் நிலையாதொரு சமாதானத்தை நெருங்குவதற்கும், நல்லிணக்கத்தை

மேம்படுத்துவதற்கும் 2019 வரவு செலவு திட்டத்தில் ரூபா 15.25 பில்லியன் நிதியானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்கள் குறித்த அலுவலகம் பரிந்துரைத்ததன் பிரகாரம் இந்நடவடிக்கையின் போது காணாமல் போன பாதுகாப்புப் படை வீரர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் குடும்பங்கள் உட்பட காணாமல் போனமை தொடர்பாக சான்றுப்படுத்தப்பட்ட காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டமாக மாதத்திற்கு ரூ.6இ000/= கொடுப்பனவு வழங்குவது இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக சமீபத்தில் நிறுவப்பட்ட இழப்பீட்டுற்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் அதன் பணியைத் தொடங்கும் வரை இந்த செயல்முறை தொடர முன்மொழியப்பட்டது.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தால் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிட்ட அதன் இடைக்கால அறிக்கையில், இப்பரிந்துரைகள் அவ்வலுவலகத்தால் முன்மொழியப்பட்டு, 2019 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் அறிக்கையில் அப்பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு பாராளுமன்ற ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

காணாமல் போன நபர்களின் குடும்ப உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பொருளாதார அசௌகரியங்களை அடையாளம் கண்டு, இழப்பீட்டுற்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் (2018 இலக்கம் 34 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது) வழங்கப்படும் வசதிகள் ஊடாக இழப்பீடு மற்றும் ஏனைய விதத்தில் சேதங்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படும் வரை மிகவும் ஆபத்தில் இருக்கும் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்குவதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு

இந்த பரிந்துரைகள் காணாமல் போனவர்களின் அலுவலகத்தால் அவர்களின் இக்கட்டான தேவைகளை நிறைவேற்ற உதவுவதற்கும், துன்பங்களின்போது உறுதியாக இருப்பதை நிலைப்படுத்தவும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

அதன்பிரகாரம், தற்போது காணப்படாத சான்றிதழ்கள் பெற்ற சான்றிதழைப் பார்க்காத 153 நபர்களுக்கு இம்மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுகின்ற அதேவேளை, இறப்புச் சான்றிதழை அடிப்டையாகக் கொண்டும் கொடுப்பனவுகளை செலுத்த அமைச்சரவையினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளமையால்,

விண்ணப்பங்களின் எண்ணிக்கை 22,000 ஆக இருக்கக்கூடும் என கணக்கிடப்பட்டுள்ளது. காணாமல் போனமை தொடர்பாக சான்றிதழ் வைத்திருப்பவர்கள் மாதாந்தம் ரூ.6,000 கொடுப்பனவுக்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

**புள்ளிவிவர குறிப்புகள் எண் 10.1**

காணாமல் போனமை தொடர்பாக சான்றிதழ்கள் பெற்ற சார்ந்தவர்கள் தொடர்பாக ரூ 6இ000.00 இடை நிவாரணம் – 2019 (ஜனவரி – அக்டோபர்)

| *தொ.இல* | *பிரதேச செயலகம்* | *பயனாளிகளின் எண்ணிக்கை* | *ஒதுக்கப்பட்ட நிதி (ரூ)* |
|---|---|---|---|
| *1* | கரவெட்டி | 1 | 60,000.00 |
| *2* | காரைநகர் | 8 | 332,277.42 |
| *3* | கோப்பாய் | 6 | 360,000.00 |
| *4* | நல்லூர் | 2 | 85,600.00 |
| *5* | பருத்தித்துறை | 14 | 761,400.00 |
| *6* | வடமராட்சி கிழக்கு | 1 | 50,800.00 |
| *7* | வடமராட்சி மேற்கு (பருத்தித்துறை) | 1 | 60,000.00 |
| *8* | வேலானை | 2 | 104,600.00 |
| *9* | சாவகச்சேரி | 2 | 84,703.23 |
| *10* | ஊர்காவற்துறை | 2 | 93,800.00 |
| *11* | கோறளைப்பற்று (வாழைச்சேனை | 30 | 1,466,400.00 |
| *12* | கோறளைப்பற்று மத்திய (வாழைச்சேனை) | 6 | 329,400.00 |
| *13* | மண்முனை வடக்கு | 6 | 346,000.00 |
| *14* | மண்முனை மேற்கு (வவுனியா) | 34 | 1,541,400.00 |
| *15* | மண்முனைப்பற்று | 7 | 376,600.00 |
| *16* | போரதீவு பற்று (வெல்லாவெளி) | 29 | 1,388,400.00 |
| *17* | கோறளைப்பற்று (வாகரை) | 2 | 120,000.00 |
| | மொத்தம் | 153 | 7,561,380.65 |

மேற்கண்ட புள்ளி விவரங்களின்படி 10.1 இற்கேற்ப 2019 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரை காணாமல் போனமை தொடர்பாக சான்றுப்படுத்தப்பட்டு, அவர்களில் சார்ந்திருப்போருக்குபவர்களுக்கு ரூ. 6,000.00 இடை நிவாரணத்திற்குரிய 153 பயனாளிகளுக்கு ரூ. 7,561,380.65 ஒதுக்கீடானது வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, நவம்பர் மதல் டிசெம்பர் வரை ரூ.8,434,9801.65 நீதியானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 2.1.அமைச்சின் நிறுவனங்களின் செயலாற்றுகை 2019

### 2.2.1 அரசகரும மொழிகள் திணைக்களம் அறிமுகம்

1956 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக 1956.10.01 ஆம் திகதியன்று அரசகரும மொழிகள் திணைக்களம் தாபிக்கப்பட்டது. 1987 – 13 ஆம் அரசியலமைப்பு திருத்தத்திற்கும் 1988 – 16 ஆம் அரசியலமைப்பு திருத்தத்திற்கும் அமைவாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் இரண்டும் இலங்கையின் அரசகரும மொழிகளாக்கப்பட்டதோடு, ஆங்கிலம் இணைப்பு மொழியாக்கப்பட்டது.

அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் 18ஆம் மற்றும் 19 ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மொழிக் கொளகையை வினைத்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கும் நிறுவனமாக தற்போது அரசகரும மொழிகள் திணைக்களம் செயற்படுவதோடு, அதற்கமைய மேற்குறித்த மூன்று மொழிகளுக்கு உரிய மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அரசாங்கத்திற்கு வழங்குதல், அரசாங்க உத்தியோகத்தர்களின்மொழித்தேர்ச்சியை விருத்தி செய்தல், கலைச்சொற்றொகுதிகளை தயாரித்தல்,மொழி தொடர்பான பாடப்புத்தகங்கள் மற்றும் அகராதிகளை தொகுத்தல் முதலான பணிகள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் மேற்கொளள்ப்படுகின்றன. ‘பாஷா மந்திரய’, இலக்கம் 341/7, கோட்டே வீதி, ராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ள இத் திணைக்களத்தின் பிரதான பதவியை அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம் வகிக்கிறார்.

### தொலைநோக்கு

சகவாழ்வுடன் கூடிய சமாதானமான மும்மொழிச் சமூகம்.

### செயற்பணி

இன ஒற்றுமை மற்றும் சமாதானத்தை நோக்கமாகக் கொண்ட அரசகரும மொழிக் கொள்கையை வினைத்திறன்மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கலும் ஒருங்கிணைத்தலும்.

### திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் பணிகள்

- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் 03 /2014 பிரகாரம் அரசகரும மொழித்தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டிய அரச உத்தியோகத்தர்களுக்கான எழுத்து மூல மற்றும் வாய்மூல பரீட்சைகளை நடாத்தலும் சான்றிதழ்களை வழங்கலும்.
- அரச மற்றும் பகுதி அளவிலான அரச நிறுவனங்களின் மொழிபெயர்ப்பு பணிகளை நிறைவேற்றல் (சிங்களம் / தமிழ் ∴ ஆங்கிலம்)
- பல்வேறு துறைகளுக்குரிய கலைச்சொற்றொகுதிகளை தொகுத்தல் (சிங்களம் /தமிழ் / ஆங்கிலம்)
- அரச உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சி பரீட்சைகளுக்கான பாடப்புத்தகங்களையும் வழிகாட்டல் நூல்களையும், இருவெட்டுக்களை தொகுத்தலும் விற்பனை செய்தலும்.
- நவீன தொழிநுட்ப முறைகளை பயன்படுத்தி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் போன்றே சர்வதேச ரீதியான மொழிகளை கற்பித்தலும் பரீட்சைகளை நடாத்தலும்.
- வெளி நிறுவனங்களின் பணிக் குழுவினருக்கு மொழித் தேர்ச்சி பரீட்சைகளையும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளையும் நடாத்தல்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் மொழிப்பெயர்ச்சி பாடநெறிகளை பயில்வோருக்கு செயன்முறைப் பயிற்சியை வழங்கல்.

மேற்குறித்த அனைத்து பணிகளையும் நிறைவேற்றதுவதன் பொருட்டு திணைக்களத்தில் அபிவிருத்தி, பரீட்சை, மொழிபெயர்ப்பு, மொழி ஆய்வுகூடம், மொழி ஆராய்ச்சி மற்றும் புத்தகத் தொகுப்பு, கலைச்சொற்றொகுதி தொகுப்பு, நூலகம் மற்றும் அகராதி ஆகிய பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 அரசகரும மொழிகள் ஆணைக்குழு அறிமுகம்

அரசகரும மொழிகள் ஆணைக்குழு 1991 மற்றும் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. ஆணைக்குழு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட 06 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களுள் ஒருவர் தலைவராக ஜனாதிபதி அவர்களால் பெயர் குறிப்பிடப்படுவார். அரசகரும மொழிகள் திணைக்களத்தின் ஆணையாளர் அதிகார பூர்வமாக ஆணைக்குழுவின் செயலாளர் ஆவார்.

**தொலை நோக்கு**

பொது மக்களுக்கு சேவை வழங்கும் அணைத்து நிறுவனங்களிலும் அரச கரும மொழிகள் கொள்கை அமுலாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பலமிக்க நிறுவனமாதல்.

**பணிநோக்கு**

அரச கரும மொழிகள் கொள்கை தொடர்பான விசாரணை கண்காணிப்பு கல்வி மற்றும் ஆலோசனை மூலம் பொதுமக்களின் இரு மொழி தேவையினை வழங்குதல்.

**நோக்கங்கள்:-**

- அரசகரும மொழிகள் பயன்பாடு பற்றிக் கொள்கை அடிப்படையிலான அடிப்படைகளை விதந்துரைத்தல் மற்றும் அரசியலமைப்புத் திட்டத்தின் iv ம் பாகத்தில் உட்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்துதல் பற்றி விழிப்பாயிருத்தலும் மேற்பார்வை செய்தலும்.
- இங்கு இதன் பின்னர் தொடர்பான மொழி எனக் குறிப்பிடப்படும் அரசியலமைப்புத் திட்டத்தின் 18ம் பிரிவில் குறிப்பிடப்பட்ட மொழிப்பாவனை அரசியலமைப்புத் திட்டத்தின் iv ஆம் அத்தியாயத்தின் கருத்துக்கும் எண்ணத்துக்கும் ஏற்ற விதத்தில் நடைபெறுகின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவைப்படக்கூடிய அணைத்துச் செயல்களையும் செய்தலும், நடவடிக்கை மேற் கொள்ளுதலும்.
- அரசகரும மொழிகளை மதிப்பிடுதலை உற்சாகப்படுத்துதலும் அவற்றின் நிலமை சமத்தன்மை மற்றும் பயன்படுத்தும் உரிமையினை ஏற்றல், நடாத்திச் செல்லுதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல்.
- தனது முயற்சியினால் மற்றும் கிடைக்கும் முறைப்பாடுகளுக்குப் பதிலாக எனும் இரு முறைகளிலும் தேடுதல்களை நடாத்துதல், மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள படி பதிவேற்பாடுகளைச் செய்தல்.

**பணிகள்**

- குறித்த மொழிகளின் ஏதாவதொரு மொழியின் அந்தஸ்த்து அல்லது பிரயோகம் தொடர்பில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஏதாவது கட்டளை வழிக்காட்டல்கள் மற்றும் நிர்வாக அனுபவம் தொடர்பாக மீளாய்வினை ஆரம்பித்தல்.
